## வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
## காயல்பட்டணம்
## வாழ்க்கை திறன் கல்வி திட்டம் 28.04.2022

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 28.04.2022 வியாழன்கிழமை 11.15 மணியளவில் இளைஞர் செஞ்சுருள் சங்கத்தின் RRC சார்பாக வாழ்க்கை திறன் கல்வி திட்டத்தினை நடத்தினர். கல்லூரி முதல்வர் முனைவர் R.C. வாசுகி M.A., Ph.D., DGT இந்நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். மூன்றாமாண்டு கணிதவியல் மாணவி Z.A. ஜெய்னம்பு கிராத் ஓத இரண்டாமாண்டு ஆங்கில இலக்கிய மாணவி செல்வி பாத்திமா நசிரா வரவேற்புரை வழங்கினார். இளைஞர் செஞ்சுருள் சங்கத்தின் உறுப்பினர் ஆங்கிலத் துறை உதவி பேராசிரியர் P. ராமலெட்சுமி M.A., M.Phil., சிறப்பு விருந்தினரை குறித்து தொகுப்புரையை வழங்கினார்.

கல்லூரியின் முதல்வர் முனைவர் R.C. வாசுகி M.A., Ph.D., DGT சிறப்பு விருந்தினருக்கு அன்பளிப்பு வழங்கிய பின் சிறப்பு விருந்தினர் தென்திருப்பேரை, அரசு மருத்துவமனை,ICTC Counsellor திருமதி R. அமராவதி M.Sc(Psy)., அவர்கள் மாணவியர்களுக்கு அன்றாட வாழ்க்கையின் தேவைகளையும், சவால்களையும், அதனை திறம்பட சமாளிக்க உதவும் யுக்திகளைப் பற்றி உரையாற்றினார்கள். இதனையடுத்து மாணவியருக்கு தங்களிடம் நிலவிய கேள்விகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவாக இளைஞர் செஞ்சுருள் சங்கத்தின் செயலாளர் கணிதவியல் துறையின் உதவிப் பேராசிரியர் திருமதி G. பத்மா கார்த்தியாயினி M.Sc., M.Phil., நன்றியுரை தெரிவிக்க, இறுதியாக துஆ ஓத மற்றும் நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவடைந்தது.